152

152

போதனு விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.



OFFICE OF THE REGISTRAR OF B…
24 OCT 1941
MADRAS

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

… 15 அக்டோபர் 1941 மலர் 4

…றை பாடசாலை, திருச்சிநுப்பள்ளி.

… தனிப்பிரதி அணு 1¼.

JL
ஜ 21, N11PP.
N41.32.4
182297

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	89
2.	சென்னை கல்வி இலாகா அறிக்கை	91
3.	அறநெறித்தொடர்	92
4.	வைரமும், கரியும் எவ்வாறு சம்பந்தமுடையது ...	93
5.	ஆசிரிய உலகம்	94
6.	பாடக் குறிப்பு	97
7.	நமது சாடு	99
8.	செங்கற்கள் சிவப்பாயிருப்பதன் காரணமென்ன? ...	102
9.	சிறுவர் நடித்தலுக்கேற்ற ஓர் நாடகம் ...	103
10.	எனது கதை	107
11.	காற்றின் அழுத்தம்	109
12.	யுக்திக் கணக்கு விடுகவி விடைகள்	110
13.	நான் யார் தெரியுமா?	111
14.	கைகண்ட போதனாமுறை	112
15.	பெற்றோர் சங்கத் திறப்பு விழா	113
16.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	115
17.	யோசனைக் கணக்கு	119
18.	தேசிய கீதம்	120

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher:
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை!!

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
OCT 1941
MADRAS

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 32] 15 அக்டோபர் 1941 [மலர் 4

பத்திராதிபர் குறிப்புகள்

கல்வி கண்காட்சி (Educational Exhibition)

போதனுமுறையில் போதிய தேர்ச்சியுண்டாக்க வல்ல உபாயங்களில் **கல்வி கண்காட்சி** தலைசிறந்ததொன்ருகும். மாணவர்களின் சுயமுயற்சியைத் தூண்டி, அதனுல் காட்சிப் பொருட்களை ஆர்வத்துடன் அவர்கள் சேகரிக்க ஊக்குகின்றது இவ்வேற்பாடு. அன்றியும், புது முறையின்படி "செய்து கற்றல்" (Learning by doing) எனும் கோட்பாட்டை மாணவர்கள் அனுஷ்டிக்க மிகவும் உபயோகமாய் இருக்கின்றது. விசேஷமாக, ஆரம்பப் பாடசாலைப் புதுப்பாடத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பாடத்தையும் திறமையாய்க் கற்க, அந்தந்தப் பாடத்திற்குரிய அனுபவ சித்தமான **அப்பியாச வேலைகளை** (Practical Work) மாணவர்களே செய்யவேண்டியவர்களாகின்றனர். தனித்தனியாய் மாணவர்கள் ஷை அப்பியாசங்களைச் செய்து கற்கின்றனர். ஆசிரியர் துணை நிற்கின்றனர். எனினும் அனைவர்க்கும் பொதுவாகவும் விசேஷ விதமாகவும், எல்லா மாணவர்களின் திறமைகளை எடுத்துக்காட்டவும், சந்தர்ப்பத்தை அளிக்க நம் பள்ளியில்

இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை கண் காட்சி (Educational Exhibition) அமைத்துள்ளோம். ஆகையால் நம் பள்ளியில் பயிலும் ஆசிரிய மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒருதரம் இச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

இதனையுன்னி இவ்வருஷம் நமது போதனா முறைப் பாடசாலையில் **கல்வி கண்காட்சி** இம்மாதம் 10, 11, 12 தேதிகளில் நடைபெறும்படி ஏற்பாடு செய்துள்ளோம். அதற்கேற்ப நம் மாணவர்கள் எல்லோரும் ஊக்கத்துடன் வேலைசெய்துவருவது மிகவும் மெச்சத்தக்கது. இதன் முழு விவரத்தை அடுத்த மாதத்திய நமது பூங்கொத்து மலரில் காணலாம்.

* * *

T. S. L. C. பரீட்சை 1942: இப்பரீட்சைக்குப் பணம் இதுவரை கட்டாத நமது பழைய மாணவர்கள் தாங்கள் தவறிப் போன பாடங்களில் மீண்டும் பரீக்ஷை எழுத, இம்மாதம் 20-ம் தேதிக்குள்ளாவது இப்பாடசாலைத் தலைமை ஆசிரியர்க்குப் பணம் அனுப்பிவைக்கக் கடவர். தலைமை ஆசிரியர்க்குப் பணம் அனுப்பவேண்டுமே அன்றி, ரேஞ்சு டெப்யூடி இன்ஸ்பெக்டருக்கு அனுப்பத் தேவையில்லை.

* * *

Identification Certificate: மற்ற ஸெண்டர்களில் பரீக்ஷை எழுதப்போகும் நமது பழைய மாணவர்கள், அத்தாக்ஷிப் பத்திரம் (Identification Certificate) நம்மிடமிருந்து பெறவேண்டுமாயின் $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு (தபால் சார்ஜ்) அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும் என்பதை அறிக.

182297

சென்னை கல்வி இலாகா சுற்றுத்தரவுகள்

(Proceedings L. Dis. No. 3195 B. 41, dated 16-8-'41 of the Director of Public Instruction, Madras.)

ஷை உத்தரவின்படி, ஆரம்பப் பாடசாலைகளில் கைவேலை கற்பிக்கும் ஆசிரியர்கட்கு (Manual Training Instructors) 6-12-'40 G. O. No. 2347-ன்படி வழங்கப்படும் கிராண்டு விஷயமாய், அந்த கிராண்டு அந்தப் பாடம் கற்பிக்கப்படும் திறமைக்குத் தக்கபடி, உயர்த்தப்பட்டோ, குறைத்தோ கொடுக்கப்படும்.

*   *   *   *

(Proceedings Dis. No. 3491/41 dated 19th August 41 of the Director of Public Instruction, Madras.)

இதன்படி, ரெக்கார்டு ஷீட்டை (Record sheet) போக்கடித்தவர்கட்கு மீண்டும் அதன் நகல் பிரதிகளை (Duplicate copies) அளிக்க ஆரம்பப் பாடசாலைத் தலைமையாசிரியர்கட்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அதை வழங்குமுன், டெப்யூடி இன்ஸ்பெக்டரின் அனுமதியை அந்த தலைமை ஆசிரியர் பெற்றுக்கொள்ளவேண்டும். டெப்யூடி இன்ஸ்பெக்டரும் தம் உத்தரவை அனுப்புமுன், அந்த ரிக்கார்டு ஷீட் காணமற்போனது வாஸ்தவம்தானவென்பதை நன்கு விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஆசிரியர் :—அடே சோமு, இவன் புத்தகமுங் கொண்டுவரவில்லை, பலகையுங் கொண்டுவரவில்லை; இவ்வாறு ஒருவன் வந்தால் அவனைக்குறித்து நீ என்ன அபிப்பிராயப்படுவாய்?

மாணவன் :—உபாத்தியாயர் என்று நினைத்துக்கொள்வேன்.

அறநெறித்தொடர்

(M. A. S. Udayar)

(கொத்து 32, மலர் 3, 64-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூதுரைகல்
மெத்தெனப்பேசு
மேதையெனப்படு
மைக்குலம்போலிரு
மொழி தடுமாறேல்
மோகம் அகற்று
மௌட்டிகம் பேசேல்
யதியைப் போற்று
யானைபோலாதிரு
யுத்தமகற்று
யூகவானாயிரு
யோகரைப்புர
யௌவனம் விரும்பேல்
வழக்கழிவுரையேல்
வாளாவுறங்கேல்
விடரோடிணங்கேல்
வீண்மொழி பேசேல்
வெறுவினை புரியேல்
வேட்பமொழி
வைகலும் பூசைகாண்
வௌவுதலொழி
கடப்பாடியற்று
அடாத்தொழில் புரியேல்
கடிந்துரையாடேல்
படீரெனப் பேசேல்
அடுத்துமுயல்
நாடுடேகு
ஓடெடுத்துழலேல்
கேடேய்வழிச்செலேல்
பாடைபல கல்
நாடொப்பனசெய்
பாடோர்ந்தியற்று
பணப்பேய் கோட்படேல்
உணாப்பொருள் விளை
பிணிக்கிடங்கொடேல்
கணீரெனச் சொல்
நாணும்வினை செயேல்
நீணெறி தனிச்செலேல்
வாணோர்சொல்லொழி
ஆணையிட்டுரையேல்
ஊணொழித்துண்ணேல்
மாணோர் வழிச்செல்
கரவினைகருதேல்
இராவழிச் சேரேல்
உரிமையிழவேல்
நிரீச்சுரம் பேசேல்
வருவதுணர்
போரெனப் புறங்கொடேல்
நீரேய்ப்புரமமர்
புரைமனம் போற்றேல்
நீரொத்துதவு
ஊரோடொத்துவாழ்
இலவுபோலாதிரு.

(அரும்பதவுரை)

105. மேதை = அறிவாளி.
109. மௌட்டிகம் = வீண்கர்வம்.

110. யதி=விருந்தாய் வந்த துறவோர்.

112. வாளா=வீணுக.

113. விடர்=தீவழிச்செல்வோர்.

121. வேட்ப=விரும்ப.

134. பாடோர்ந்து=செய்தொழிலை ஆராய்ந்து.

135. கோட்படல்=பற்றப்படுதல்.

144. மாணுர்=மாட்சியுடையோர்.

152. புரைமனம்=குற்றமுடைய மனம்.

160. இலவுபோலாதிரு=இலவுகாத்த கிளி முடிவில் பயன் பெருது வருந்துதல்போல். நீ உன்னை நம்பியோரை ஏமாறச்செய்யாதிரு.

வயிரங்களும், கரியும் எவ்வாறு சம்பந்தமுடையது?

சுத்தமான இயற்கையாக உண்டாக்கப்பட்ட கரியிலிருந்தே வயிரங்கள் எடுக்கப்படுகின்றன. கரியில், கரிப்பொருளும் மற்றும் வளர்ந்து, சிறந்த செடிகளிலுள்ள தனிப்பொருள்களும் (Elements) சேர்ந்திருக்கின்றன. அவைகள் அநேக வருடங்களுக்குமுன் மண்ணின் ஒரு பாகமாக மாறிவிட்டது. கரி கண்டு பிடிக்கப்பட்ட காலத்துக்கு Carboniferous period எனப் பெயராம். வயிரங்கள் மிகவும் கடினமான பொருட்கள். அவைகள் மற்ற வயிரங்களால்தான் கீற முடியும். கிராபைட் (Graphite) டிலிருந்து காகிதப்பென்சில்களின் காரீயம் செய்கிருர்கள். கரி நீர்ப்பொருட்களின் (Carbon) மிருதுவான பொருட்கள் கிராபைட்டும் கரியுமாகும் (Charcoal). கரி நீர்ப் பொருட்கள் எல்லா மிருகங்களிலும், செடிகளிலும் காணப்படும். (fuels) இவை எரியும் பொருட்களின் முக்கியமான பாகமாகும்.

S. A. Ranganathan.

ஆசிரிய உலகம் 3

நவீன கணிதம்

(ம. வி. இராஜேந்திரன்)

'பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது' என்பது பழமொழி. பாடசாலையில் ஒருவன் பயின்ற கணிதமானது அவனது வாழ்க்கையில் நேரே பயன்படாது என்பது இதன் கருத்து. ஆனல் இப்பழமொழியைப் பொய்யாக்கவேண்டுமென்று தற்காலம் முயலுகிறது. 'பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவும்' என்று காட்டக் கணிதாசிரியர்கள் கங்கணங்கட்டிவிட்டார்கள். ஆகையால்தான் கணிதபாடம் வாழ்க்கையைச் சம்பந்தப்படுத்திப் போதிக்கப்படவேண்டுமென்னும் கொள்கையும் தோன்றுவதாயிற்று.

வாழ்க்கையைச் சம்பந்தப்படுத்திப் போதிப்பது என்ருல் என்ன? மாணவனுடைய ஊர், சுற்றுவட்டாரம் அல்லது நாடு இவற்றில் நடைபெறும் வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலியவற்றைச் சம்பந்தப்படுத்திக் கணக்குகள் அமைத்தும், அவனுடைய சுற்றுப்புறங்களுக்குத் தகுந்தவாறு ஸ்தல சம்பந்தமான கணக்குகளை உண்டாக்கியும் போதித்தலே வாழ்க்கையைச் சம்பந்தப்படுத்திப் போதித்தல் எனப்படும். நான்காவது வகுப்பில் படிக்கும் மாணவனுக்கு பவுன், ஷில்லிங், பென்ஸைப்பற்றியோ அல்லது அயல்நாட்டு அளவுகளைப்பற்றியோ போதிப்பதை விட்டுவிட்டு அவனுடைய ஊரிலோ நாட்டிலே ாவழங்கும் எண்ணல், எடுத்தல், நீட்டல், முகத்தல் அளவுக்களைச் சம்பந்தப்படுத்திக் கணக்குகள் அமைப்பதும் நாணயமாற்றுக்களைச் சரிவரக் கற்றுக்கொடுப்பதும் எவ்வளவோ பயனளிக்கும்.

ஒரு நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பல்வேறு வகையான அளவுத்திட்டங்கள் உண்டு, வியாபார முறை உண்டு, விவசாய வழக்கம் உண்டு. பணம் கொடுக்கல் வாங்கல் ஒழுங்குகளும் உண்டு. இவற்றை அநுசரித்து அந்தந்தப் பாகத்திலுள்ள சிருருக்கு அவர்கள் மனவளர்ச்சிக்குத் தக்காப்போல் கணக்குகளை அமைக்கவேண்டும். மேலும் பட்டணத்தில் வசிப்பவனுக்கு அவனுக்கு அநுசரணையான வகையில் அவனுடைய அறிவுக்கு எட்டியவாறும் பட்டியில் இருப்பவனுக்கு அவனுக்குப் புலப்படும் பொருள்களை வைத்தும் கணக்கு அமைத்தல் நலம். இவ்வாறு கணக்கை அமைத்துப் போதிப்பதைத்தான் ஸ்தல சம்பந்தப்படுத்திக் கணிதம் போதித்தல் என்பர்.

கணித பாடத்தில் உபகரணங்களை அதிகமாகக் கையாளுதல் நவீன கணிதத்தில் ஓர் முக்கிய அம்சம். உபகரணங்களைப்பற்றிப் பேசுவதென்றால் இக்கட்டுரை இடங்கொடாது. ஆகையால் அவற்றைப்பற்றி விரிவாகப் பின்னொருகாற் பேசலாம்.

கணிதமானது மாணவர்களுக்கு அளிக்கும் பயன்கள் சில. அது புத்தியை விருத்திசெய்து, யோசனைசக்தியையும், ஞாபக சக்தியையும் விருத்திசெய்கிறது; திடமனது உண்டாக்குகிறது. வாழ்க்கையில் அதிகமாகப் பயன்படுகிறது.

இவ்விதம் அதிக உபயோகமான பாடத்தை மாணவர்கள் கவனத்துடன் வெறுப்பின்றி விருப்புடன் கற்கவேண்டும். அதற்காகவே விளையாட்டுமுறை (play way method), கான்ஸென்ட்ரிக் முறை (concentric system), சுய நோக்க முறை (project method), வார்தா முறை (Wardha plan), சுயமாய்க் கண்டு பிடிக்கும் முறை (Heuristic method) முதலிய முறைகள் ஏற்பட்டுள்ளன.

மேல் வகுப்புக்களில், அதாவது 6, 7, 8-வது வகுப்புக்களில் சமயாசமயங்களில் யோசனைக் கணக்குகளும் பயன்படும். அங்கு நாம் உபயோகிக்கும் கணக்குகளும், ஸ்தல சம்பந்தமானவையாயும் வாழ்க்கையில் நேரே பயன்படுபவையாயும் இருத்தல் வேண்டும். மேலும் கணக்குகள் விநோத ரசம் பெருந்தியவையாய் இருந்தால் மாணவர்கள் பிரியத்துடன் செய்வர். இங்குச் சில கணக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கூடுமானமட்டும் மனக்கணக்காகச் செய்யலாம்.

1. கிட்டு கடைக்குப்போய்ப் பட்டுத்துணி ஒன்றை விலை விசாரித்தான். கெஜம் $2\frac{1}{2}$ ரூபாய் என்று கடைக்காரன் பதில் விடுத்தான். ஆனால் கிட்டுவுக்கு வேண்டியது எல்லாம் $\frac{1}{4}$ கெஜ நீளம் $\frac{1}{4}$ கெஜ அகலம் உள்ள துண்டுதான். கடைக்காரனும் 1 கெஜம் நீளம் 1 கெஜம் அகலம் உள்ள துண்டு ஒன்றிலிருந்து மேற்கூறிய விலை விகிதப்படியே கிழித்துக்கொடுத்தான். கிட்டு எவ்வளவு கொடுக்கவேண்டும்?

2. ஓர் மந்தையின் மாடுகள் சமமாக 3 புலன்களில் மேய்ந்து, 5 சாலைவழியேகி, 7 குட்டைகளில் தண்ணீர் அருந்தி, 9 மரத்தடியில் இளைப்பாறி, 10 தெருக்கள் வழியே சென்றன. மந்தையின் மாடுகள் 1000-க்கு உட்பட்டவையென்றால் அவை எத்தனை?

3. ஓர் எலுமிச்சம் தோட்டத்துக்குப்போக ஐந்து காவற்காரர்களைக் கடக்கவேண்டும். ஒருநாள் ஒருவன் ஒரு எலுமிச்சம்பழம் கேட்டான். ஒவ்வொரு காவற்காரனும் நீ அறுத்து வரும் பழத்தில் பாதியும், உன் பங்கில் ஒன்றும் கொடுக்கவேண்டும் என்று சொன்னான். அவன் ஒரு பழம் கொண்டு செல்ல வேண்டுமானால் எத்தனை பழம் பறித்திருப்பான்?

4. ஒரு தலையாரிக்கு மூன்று மக்கள். ஓர் இரவு அவன் சில வெள்ளரிக்காய்களைக் கொண்டுவந்தான். மூத்தவன் வந்து காய் ஒன்றை எடுத்துத் தன் பிள்ளை கையில் கொடுத்துவிட்டு, மீதியை மூன்று பங்கு வைத்து ஒரு பங்கை எடுத்துச் சென்றான். பின் அடுத்தவன் வந்து தன் பிள்ளை கையில் ஒரு காயைக் கொடுத்து மீதியானவற்றை மூன்று பங்கு வைத்து ஒரு பங்கு எடுத்துச் சென்றான். பின் மூன்றாவது மகன் வந்து தனது பிள்ளை கையில் ஓர் காயைக் கொடுத்துவிட்டு மீதியானவற்றை மூன்று பங்கு வைத்து ஒரு பங்கு எடுத்துச் சென்றான். காலையில் தலையாரி வந்து பார்க்கையில் சில காய்களே இருந்தன. அவற்றை இரண்டு இரண்டாக மூவருக்கும் கொடுத்தான். அவன் கொண்டுவந்த காய்கள் எத்தனை?

இவைபோன்ற கணக்குகளை ஆசிரியர் உண்டுபண்ணலாம். இப்பேர்ப்பட்டவை மாணவர்களைத் தாங்களாக யோசித்து விடை கண்டுபிடிக்கத் தூண்டும். அவர்களுக்குக் கணக்கின்மட்டில் ஓர் பிரியம் உண்டாகும். எப்போது ஆசை உண்டாயிற்றோ அப்போது தாங்களே கணித பாடத்தில் கவனம் செலுத்துவர். ஆனால் ஒரு காரியம் ஞாபகம் இருக்கவேண்டும். மாணவர்கள் சக்திக்கு மிஞ்சியதாகக் கணக்கு இருந்தால் அவர்களுடைய உற்சாகம் குன்றும். வேடிக்கைக் கணக்குகள் மீதும் வெறுப்பு உண்டாகிவிடும். ஆகவே அவர்களின் ஆற்றலுக்கு அமைவான கணக்குகளைத் தெரிந்தெடுத்துப்போடலாம். படிப்படியாய் உயர்த்திக்கொண்டே போகலாம்.

OFFICE OF THE REGISTRAR OF
24 OCT 1941
MADRAS

பாடக் குறிப்பு

வாசக பாடம் (இரண்டாவது வகுப்பு)

(M. V. Rajendram.)

நோக்கம்: சிறு வாக்கியங்களை வாசித்தலும் அவற்றை அமைப்பதில் தேர்ச்சிபெறுதலும்.

பீடிகை: பாடசம்பந்தமான படங்களைத் தயாரித்து அவற்றைக் காட்டி மாணவர்களிடம் சம்பாஷித்தல்; அவர்களுடைய எண்ணங்களைக் கூடுமானமட்டும் சிறு வாக்கியங்களாக அவர்களை வெளியிடச்செய்தல். ஆசிரியர் இதற்கு உதவிபுரிதல் வேண்டும்.

பாடவிளக்கம்:

(i) படத்தில் நீ என்ன பார்க்கிறாய்? ஒரு மரம் இருக்கிறது. மரத்தின் அடியில் ஓர் மனிதன் தூங்குகிறான். மரக்கிளையில் ஓர் காகம் இருக்கிறது.

(ii) கண்ணன் கையில் குடை இருக்கிறது.
காற்றாடி ஆகாயத்தில் பறக்கிறது.
கண்ணன் காற்றாடியை மரத்தில் கட்டினான்.
கண்ணனுடைய கையில் புத்தகம் இருக்கிறது.

(iii) மரத்தடியில் நாய் படுத்து இருக்கிறது.
மரக்கிளையில் சேவல் உட்கார்ந்து இருக்கிறது.

முறை: மேலே காட்டப்பட்ட வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் விளக்கும் அழகான படங்கள் தயாரித்துக்கொண்டு அவற்றைக் காட்டி மாணவர்களிடமிருந்து தகுந்த பதிலை வரவழைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு வாக்கியமும் சரியான விதத்தில் வரவழைக்கப்பட்டதும் பல மாணவர்களைத் திரும்பவும் அவ்வாக்கியத்தை உச்சரிக்கச்செய்யவேண்டும். பின் கரும்பலகையில் அதைத் தெளிவாக எழுதி மறுபடியும் நாலைந்து மாணவர்களைச் சுட்டிக்காட்டி வாசிக்கச்செய்யலாம். இவ்விதமே படங்களைக் காட்டியும் சம்பாஷித்தும் மாணவர்களை உற்சாகப்படுத்தி வரவழைத்து எல்லா வாக்கியங்களையும் கரும்பலகையில் எழுதவேண்டும்.

பின் ஆசிரியர் ஒரு முறை நிறுத்தி வாசித்துக் காட்டியபின் மாணவர்களிற் பலரை ஆளுக்கொரு வாக்கியமாக வாசிக்கச் செய்யலாம். ஒரு முறை வாசித்தபின் மறுமுறை சற்று வேக மாக வாசிக்கச் செய்யவேண்டும்.

மாணவர்கள் வாசிக்கும்போதும் பேசும்போதும் திருத்த மான உச்சரிப்பு கவனிக்கப்படவேண்டும்.

அப்பியாசம் : (அப்பியாசங்கள் நாம் எடுத்துக்கொண்ட நோக்கத்துக்கு ஏற்றவாறு அமையவேண்டும். சுலபமான வாக் கியங்கள் திருத்தமாக அமைக்கக் கற்றுக்கொடுப்பதும் நமது நோக்கம்.)

(i) கரும்பலகையில் எழுதியவற்றை அழித்தபின்னர் கேள்விகள் கேட்கலாம்.

மனிதன் எங்கே தூங்குகிறன் ?
காகம் எங்கே இருக்கிறது ?
கண்ணன் கையில் இருப்பது என்ன ?
காற்றுடி எங்கே பறக்கிறது ?
கண்ணன் செய்தது என்ன ?
புத்தகம் எங்கே இருக்கிறது ?

(ii) கோடிட்ட இடங்களை நிரப்பு (கரும்பலகையில் மாண வர்களே எழுதவேண்டும்).

மரத்தின்———ஓர் மனிதன்———.
———ஓர் காகம்———.
கண்ணன் கை——— குடை ———.
காற்றுடி ——— பறக்கிறது.
——— சேவல் ——— இருக்கிறது.

(மேலே காட்டிய அப்பியாசத்தில் இடைச்சொற்களை நாம் நன்ருகக் கவனிக்கிறேம்.)

(iii) மரத்தின் அடியில் இருவர் ——— ?
மரக்கிளையில் பல காகங்கள் ——— ?
கண்ணன் கையில் இரு குடைகள் ——— ?
காற்றுடிகள் ஆகாயத்தில் ——— ?

இம்மாதிரி அப்பியாசங்களைக் கொடுத்து வினைமுற்றுக் களைச் சரியாக அமைக்கச்செய்யலாம். எண் இங்கே கவனிக்கப் பட்டது.

நமது சரடு

(கொத்து 32, மலர் 3, பக்கம் 76-ன் தொடர்ச்சி.)

அன்று நான் அனுப்பிய சரடை, வீசை நாலரை அணுக்கள் வீதம், பத்திராதிபர் எடுத்துக்கொண்டு, கணக்குப் பார்த்து, பாக்கிப்பணத்தை அனுப்பிவிட்டார். அப்பணத்தை எனது நண்பர், மிஸ்டர் 'மை' கடனுகக் கேட்டார். நானும் வட்டியில்லாமல் சந்தோஷமாகக் கொடுத்தேன். இப்பணத்தை ஓர் முதலாகக்கொண்டு, மருந்து வியாபாரம் செய்யத் தொடங்கினர். இதில், 'முத்தம்' என்று சொல்லி, ஓர்விதமான லேகியம் செய்து, ஒரு பலம், ஒரு அணுவீதம் விற்றுவந்தார். எல்லாவிதமான வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து. வியாதியஸ்தர்கள் அம்மருந்தை வாங்கி, உபயோகித்து சௌக்கியமடைந்திருக்கின்றார்கள். எனது நண்பருக்கும் நல்ல லாபம் கிடைத்தது. காலக்கிரமத்தில் 'முத்தம்' என்ற லேகியத்தின் மகிமை நாடெங்கும் பரவிற்று. நல்ல வியாபாரம் நடந்தது. இச்சமயத்தில், நமது வைத்தியரை, உள்ளூர் ஜனங்கள், "மிஸ்டர் மை, இந்தா ஒரு அணு முத்தம் கொடு" என்று அவரைப் பார்த்த நேரமெல்லாம் பரிகாசம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். இச்சங்கடத்தால் அவர் இம்மருந்தை மாற்றி வேறென்று செய்யவேண்டுமென்று எண்ணிக்கொண்டு, அதற்கு ஆராய்ச்சிசெய்து வந்தார். நானும் அவருக்கு உதவி செய்துவந்தேன்.

இந்நாட்களில் ஓர்நாள் மாலைநேரம். மங்கலான வெய்யில், குளிர்ந்தகாற்று மெல்லென வீசிக்கொண்டிருந்தது. ஆகாயத்தில் கரியமேகங்கள் ஊசலாடிக்கொண்டிருந்தன. நானும், மிஸ்டர் 'மை' யும், மற்றும் சில நண்பர்களும், ரஸ்தாவின் பக்கத்திலுள்ள ஓர் வேப்பமரத்தடியில் நிழலில், வெகு தமாஷாக சீட்டு (Cards) விளையாடிக்கொண்டிருந்தோம். இவ்விளையாட்டில், 'தோற்றுப்போன கக்ஷியில் எவரேனும் ஒருவர்க்கு நெற்றியில், வெள்ளைச் சுண்ணும்பால், தோற்றுப்போன ஒவ்வொரு ஆட்டத்திற்கும் ஓர் ராமம் போடுவது' என்று பந்தயம் கட்டி, விளையாடிக்கொண்டிருந்தோம். விளையாட்டு வெகு விமரிசையாக மும்முரத்துடன் நடந்துகொண்டிருந்தது. முதல் ஆட்டத்திலேயே என் வேலையை ஆரம்பித்துவிட்டேன். ஓர் பெரும்பொய்ப் புளுகி, சரடுகள்விட்டு, வழக்காடி வம்படித்து ஏமாற்றி, அவ்வாட்டத்தை ஜெயித்து, எனது நண்பர் 'மை' க்கு நெற்றியில் ஓர் பெரிய ராமம் வரைந்தேன். கேவலம்—இரண்டாவது ஆட்டம் நடந்

தது. இத்தடவையும் ஏமாற்ற, ஊடே ஓர் சாடு விட்டேன். பலிக்கவில்லை. எதிர்க்கக்ஷியினர் சுதாரித்துக்கொண்டனர். அவர்களும் வழக்காடத் தொடங்கிவிட்டனர். இருகக்ஷியின ரும் இவ்விதம் வம்பாட ஆட்டம் சீர்குலைந்து, கலைந்தது. எல் லோரும் விளையாட்டைவிட்டு எழுந்துவிட்டோம்.

இச்சமயத்தில், எனக்கும் எனது நண்பர் 'மை' க்கும் மற் றொரு பந்தயம் நடந்தது. பக்கத்திலிருந்த மற்ற நண்பர்கள், "நாங்கள் இருவரும் பொய் புளுகுதல்—எவருடைய புளுகு பெரிதாக, அபாரமான பொய்யாக இருக்கின்றதோ அவர் அடுத் தவருடைய நெற்றியில் ஓர் பெரிய ராமம் போடுதல்" என்று சொல்லி, ஓர் பந்தயத்தை தூண்டிவிட்டார்கள். இதற்கு நாங் கள் இருவரும் சம்மதித்துக்கொண்டோம். இதில் 'யார் முத லில் பொய் சொல்லுதல்' என்ற ஓர் கேள்வியும் ஏற்பட்டது. இதை தீர்க்க, ஓர் காலணாவை, தரையில் சுழன்றுவிழும்படி போட்டனர். இதில் முதலில் எனது நண்பர் 'மை' பேசும்படி யாயிற்று. முகத்தில் ஈ ஆடவில்லை. அதிகத் துக்கத்துடன் இருந்தார். என்ன சொல்வதென்று திகைத்து யோசித்தார். எனக்கோ அதிக சந்தோஷமாக இருந்தது. சற்று யோசித்து பேச ஆரம்பித்தார்.

"நண்பர்களே, நான் ஓர்நாள் ஆகாயவிமானம் ஒன்று செய்து அதில் பறக்கவேண்டுமென்று ஆசைகொண்டேன். விடாமுயற்சியுடன் அதற்கு வேண்டிய சாமான்களை சேகரம் செய்தேன். கடைசியாக, மூங்கில் தப்பைகளால் ஓர் ஆகாய விமானம் உருவம் அமைத்து, அதை லேசான அட்டைகளால் மூடினேன். மத்தியில் நான் உட்கார்ந்துகொள்ள ஓர் இடமும் அமைத்தேன். பின் ஓர் இடத்தில் பருந்துகளுக்கு வலைபோட்டு ஆறு பருந்துகள் பிடித்தேன். வளர்த்தேன். பின் அவ்விமா னத்தின் மத்தியில் ஓர் பெரிய குடை ஒன்று கட்டினேன். அதன் இரு இறக்கைகளில், பக்கத்திற்கு மூன்று பருந்துகளாகக் கட்டினேன். எல்லாம் சரியாக முடிந்தது. கடைசியாக எல்லாம் தயார் செய்துகொண்டு, நான் உள்ளே உட்கார்ந்துகொண்டேன். பக்கத்திலிருந்தவர்களை, விமானத்தை வேகமாகத் தள்ளும்படி செய்தேன். அவர்கள் விமானத்தை வேகத்துடன் தள்ள, குடை விரிந்து, சற்று மேலே தூக்கினது. குடைமேலே தூக்க பருந்து கள், மேல்நோக்கி பறக்க ஆரம்பித்தன. குடைக்கு பருந்துகள் உதவிசெய்ய, பருந்துகளுக்குக் குடை உதவிசெய்ய விமானம் பறந்தது. எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். பின்

னர் ஓர் விசையால், குடையை சிறுக சிறுக சுருக்கினேன். கீழே இறங்கிக்கொண்டே வந்தது விமானம். இதுபோல் ஒரு சமயம், திருச்சினுப்பள்ளி, விமான நிலயத்தில் இறங்கினேன்" என்று சிரிக்காமல் சொல்லிமுடித்தார். எல்லோரும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். இது சரியான பெரிய புளுகு என்ருர்கள்.

பின் என் பேச்சை துவக்கினேன். "நண்பர்களே, இவர் திருச்சினுப்பள்ளி விமான நிலயத்தில் இறங்கும்போது நான் அங்கிருந்தேன். நன்ருகப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஜனங்கள் ஏராளமாக வந்து அதிசயமாக பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவருடைய நுட்பமான செயல்களைக்கண்டு, ஜில்லா அதிகாரிகள், மெடல் கொடுத்தார்கள். நான் கிட்டஇருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த விமானம் கீழே இறங்கும்போது சப்தம் செய்யாமல் மெதுவாக இறங்கியது" என்று சொல்லிமுடித்தேன். பக்கத்திலிருந்து நண்பர்கள் "பேஷ், பேஷ்" என்று சொல்லிக்கொண்டு கரகோஷம் செய்துகொண்டு, சுண்ணும்பு கிண்ணத்தை என் கையில் கொடுத்தார்கள். என்னுடைய பொய்தான் அபாரமான புளுகு என்று தீர்மானிக்கப்பட்டது. எனது ஆப்தநண்பர், "மிஸ்டர் கை" யின் நெற்றில் ஓர் பெரும் ராமம் தீட்டினேன். வெகு வேடிக்கையாக இருந்தது. அதிக வெட்கத்தால் எனது நண்பர் ஒன்றும் பேசவுமில்லை. நிமிர்ந்து பார்க்கவுமில்லை. யாவரும் அவரை பரிகசித்து, சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

இதற்குள் ஆகாயத்தில் கரிய மேகங்கள், கூட்டம் கூட்டமாகக் காகங்கள் திடீரென்று தோன்றுவதுபோல் தோன்றின. இருள் சூழ்ந்துகொண்டுவந்தது. வெய்யிலைக் காணும். காற்று "விர்...விர்" என்று வீசிக்கொண்டிருந்தது. இன்னும் சில நிமிஷங்களில் கனத்தமழை பெய்ய ஆரம்பிப்பதுபோல் தோன்றினது. பறவையினங்கள் தத்தம் கூடுகளுக்கு, ஆனந்த அக்களிப்புடன் திரும்பிக்கொண்டிருந்தன. மாடினங்கள், வயல்களிலிருந்து உல்லாசமாக வீடுதிரும்பிக்கொண்டிருந்தன. இந்நேரத்தில் நாங்களும் இல்லங்களுக்கு வந்துகொண்டிருந்தோம். மிஸ்டர் 'மை' நிமிர்ந்துபார்க்காமல் விரைந்து சென்றுகொண்டிருந்தார். ராமத்தை நாங்கள் அழிக்கவிடவில்லை. இச்சமயத்தில் வழியில் சிலர், "மிஸ்டர் 'மை' இந்தா அணு ஒன்று. முத்தம் கொடு" என்று ஏளனமாய்க் கேட்டனர். பலர் "கடனுக கொஞ்சம் முத்தம் கொடு" என்று நக்கல் செய்தார்கள். இதைக்கேட்ட

எனது நண்பர், சற்று யோசித்து, "நண்பர்களே! இப்போது என்னிடம் முத்தமில்லை. எல்லாம் தீர்ந்துவிட்டது. இப்போது 'அறை' தான் இருக்கின்றது. இதுவும் நல்ல மருந்துதான். வேண்டுமென்றால் வாங்கிச் சாப்பிடுங்கள். நன்றாக இருக்கும்" என்றார். இதைக்கேட்டவர் மறுமுறை பேசாமல் சென்று விட்டனர். இதிலிருந்து அவர் 'அறை' தான் விற்றுவந்தார். பின் இவரிடம் மருந்துகள் ஒருவரும் கேட்பதில்லை. வியாபாரம் நின்றுவிட்டது.

(கை) எழுதியது

(தொடரும்)

செங்கற்கள் சிவப்பாயிருப்பதன் காரணமென்ன?

செங்கற்களிலுள்ள சிவப்பு நிறத்துக்குக் காரணமென்ன வென்றால் அவைகளிலுள்ள இரும்புச் சேர்க்கைதான். (Iron compound) இந்த இரும்புச் சேர்க்கைகள் சிகப்பு பிராண யுதி யாக (Red oxide) அச்செங்கற்களைச் சுடும்போது மாறுகிறது. மஞ்சள் (Brown) வர்ணங்களும் சுண்ணும்பு அல்லது மெக்னீஷியா (Magnesia) வை களி மண்ணோடு சேர்த்தால் கிடைக்கும். செங்கற்கள் சுத்தமான களி மண்ணிலாவது மணல் கலந்துள்ள களி மண்ணிலாவது செய்யப்படுகின்றன. இந்தக் கலப்பை (Mixture) சரிவரச்செய்து, காளவாயில் சுடுதலினால் கடினமான பொருட்களாகச் செய்கிறார்கள். வெளிச்சத்தினால் சுடப்பட்ட (காயவைக்கப்பட்ட) கற்கள் அவ்வளவு கடின சக்தி வாய்ந்தவைகளல்ல.

S. A. Ranganathan.

ஆசிரியர்:—அடே டேவிட், நீ யேன் நேற்றுப் பாடசாலைக்கு வரவில்லை?

டேவிட்:—நான் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன் ஸார்.

ஆசிரியர்:—ஏன்?

டேவிட்:—என் தலையில் களிமண் இருப்பதாக நேற்றுச் சொன்னீர்களே—அதை எடுத்துவிடலாம் என்று.

சிறுவர் நடித்தலுக்கேற்ற நாடகம்—(2)

(N. R. Thiruvengadam.)

வீர பத்மினி

காட்சி 1

இடம் : சித்தூர் நகரம்; பீம்சிங்கின் கொலுமண்டபம்.

பாத்திரங்கள் : பீம்சிங், மந்திரி பிரதானிகள் (குடிகளின் க்ஷேமலாபத்தை மந்திரியிடம் பீம்சிங் விசாரிக்கிறார்.)

பீம்சிங் : மந்திரி! நம் குடிகள் யாவரும் கவலையின்றி சுகமாய் இருக்கிறார்களா? அவர்களுக்குத் தேவையானவை யாவும் சரிவர அளிக்கப்பட்டு வருகின்றனவா?

மந்திரி : மகாராஜ்! தங்கள் ராஜ்யத்தில் குறைவேது? மக்கள் எல்லாம் சகல சம்பத்தோடும் சுகமே வாழ்ந்து வருகிறார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களும் தம்தம் கடமையை செவ்வனே ஆற்றி வருகிறார்கள்.

(அச்சமயம் எங்கிருந்தோ பறையோசை கேழ்க்கிறது.)

பீம்சிங் : மந்திரி! இதென்ன பறையோசை? சென்று கவனி! (குடிகள் சிலர் தலைவிரிகோலமாய் ஓடி வருகின்றனர்.)

பீம்சிங் : (பதை பதைப்போடு) அருமைக்குடிகளே! என்ன விசேஷம்? உங்களுக்கு என்ன நேர்ந்தது?

குடிகள் : மகாராஜ்! காப்பாற்றவேண்டும்! காப்பாற்ற வேண்டும்! அந்தப்பாவி அலாவுத்தீன் சைன்யக்காரர்கள் எங்கள் வீடு வாசல்களைக் கொள்ளையாடுகிறார்கள்.

பீம்சிங் : (பற்களை நறநறவெனக் கடித்து) அலாவுத்தீன்! அலா...வுத்...தீன்! என் சமர்த்தை அவன் அறியவில்லை! கசடன்! என்னையும் ஒரு பேடி என மதித்தான்போலும்! நீங்கள் செல்லுங்கள். இதோ அவனை நிர்மூலமாக்குகிறேன். (சேனாதிபதியை நோக்கி) சேனாதிபதி! உம், விரைவில் தயாராகட்டும் நமது சேனாவெள்ளம் முழுதும் சீக்கிரம்! சீக்கிரம்!

சேனாதிபதி : மகாராஜ்! உத்தரவு. (சேனாதிபதி செல்கிறான்).

காட்சி 2

இடம்: பீம்சிங் அரச சபை.

பாத்திரங்கள்: பீம்சிங், மற்ற அரசபிரதானிகள் முதலியோர்.

பீம்சிங்: சபாஷ்! வீரர்களே! நீங்கள் அந்த துலுக்கனது துடுக்கை அடக்கி போரில் ஜெயக்கொடி நாட்டியதற்காக சந்தோஷம். வீர சொரூபிகளாகிய நீங்கள் எனக்குப் பக்கபலமாக இருக்கும் வரை இனி அவன் இப்பக்கமே தலைகாட்டமாட்டான்.

பிரதானிகள்: மகராஜ்! எங்கள் உயிர் வெல்லமல்ல! மானமே நமக்குப் பெரிது! அன்னியன் நம் நாடாள நாம் அவன் கீழ் அடிமையாகி சேவகம் செய்யவா? முடியாது, முடியாது, முக்காலும் முடியாது (பெரிய ஆரவாரம் செய்கிறார்கள்).

பீம்சிங்: பேஷ்! அதுதான் க்ஷத்திரியனுக்கு அழகு! (அச்சமயம் தூதுவன் ஒருவன் ஒரு ஓலை கொண்டுவந்து அரசனிடம் கொடுத்து வணங்குகிறான்.)

பீம்சிங்: (பிரித்துப் படித்துவிட்டு) கேட்டாயா மந்திரி சமாசாரத்தை! திரும்பவும் 'வேதாளம் முருங்கை மரமேறிய' கதையாக அலாவுத்தீன் சமாதானத்திற்கு வருகிறானும். என் மனைவி பத்மினியின் உருவத்தைமட்டும் ஒருமுறை பார்க்க அனுமதித்தால் முற்றுகை தவிர்க்கப்படுமாம்! இதெற்கென்ன யோசனை?

மந்திரி: அரசே! யோசனை என்ன! நமது ராணியோ மகா உத்தமி. அவர் உருவத்தைமட்டும் பார்ப்பதால் அவருக்கு ஒன்றும் பங்கமேற்படாது. கொடிய யுத்தத்திலிருந்தும் மக்கள் காக்கப்படுவர். ஆகவே இதற்கு அனுமதித்தல் உசிதமே.

பீம்சிங்: சரி, அப்படியே செய்வோம். (தூதனைப்பார்த்து) தூதா! நாம் சம்மதிப்பதாகச் சொல்லி உங்கள் அரசனை வரச் சொல். (தூதுவன் செல்கிறான்.)

காட்சி 3

இடம்: பீம்சிங் அரண்மனையில் ஓர் அறை.

பாத்திரங்கள்: பீம்சிங், பத்மினி, மந்திரிகள்.

(அலாவுத்தீன் பிரவேசம்)

பீம்சிங்: மகம்மதிய அரசே! உமது விருப்பப்படியே பத்மினியின் உருவத்தை (நிலைக்கண்ணாடியைக் காட்டி) அந்த நிலைக் கண்ணாடி வழியாய்ப் பார்க்கலாம்.

அலாவு: (உருவத்தைக் கண்ணுடியில் பார்த்து பிரமித்து மனதிற்குள்ளாக) ஆஹா! என்ன அழகு! என்ன சௌந்தரியம்! இவளை ஒரு நாளைக்காவது எனது ராணியாக ஆக்காவிடில் என் ஜென்மம் கடைத்தேருது.

பீம்சிங்: சரி. இனி போகலாமல்லவா?

அலாவு: ஆஹா, அப்படியே.

(வெளிச் செல்கிருர்கள். அலாவுத்தீனை வழி அனுப்பச் சென்ற பீம்சிங் தந்திரமாகச் சிறை செய்யப்படுகிருர். தன்னை மணந்தாலன்றி பீம்சிங்கை விடுவிக்க முடியாதென அலாவுத்தீன் பத்மினிக்குச் செய்தி அனுப்புகிருன்.)

காட்சி 4

இடம்: பீம்சிங் அரண்மனையில் ஓர் இரகஸ்ய அறை.

பாத்திரங்கள்: மந்திரிகள், பத்மினி, சேனுவீரர்கள்.

பத்மினி: (உதடு துடிக்க) மந்திரிகளே! வீரர்களே! துலுக்கனை நம்பிக் கெட்டோம். நம்மையும் வஞ்சித்தான். என் நாதனையும் சிறையிட்டான். இனியும் சும்மா இருத்தல் தகாது. தந்திரத்தை தந்திரத்தாலேயே வெல்லவேண்டும்.

மந்திரிகள்: ஆம், மகா ராணி, அதுவே ஏற்ற உபாயம்.

பத்மினி: (தூதுவனைப் பார்த்து) நீ உடனே அலாவுத்தீன் பாசறைசென்று நாம் அவன் எண்ணத்திற்கு இணங்குவதாகவும் நாளை இரவு 9 மணிக்கு மேல் அவ்விடம் வருவதாகவும் தெரிவித்து வா.

தூதுவன்: மகாராணி, உத்தரவு. (தூதுவன் செல்கிருன்.)

காட்சி 5

இடம்: அலாவுத்தீன் பாசறை. நேரம், இரவு.

பாத்திரங்கள்: அலாவுத்தீன், அவனது சேனுவீரர்கள்.

அலாவு: வீரர்காள்! நமது எண்ணத்திற்கிசைந்து இவ்விடம் வருவதாகச் சொல்லி அனுப்பிய ராணி இன்னும் வரக் காணேனே! பார்த்த கண்ணும் பூத்துப்போச்சே!

வீரர்கள்: அரசே! இராஜ புத்ரர்கள் சொல் தவறமாட்டார்கள். அதிலும் உத்தம மாதான ராணி தன் வார்த்தையை அணுவளவும் பிசகி நடவார். குறித்த நேரத்தில் வந்துவிடுவார்கள். கவலை வேண்டாம்.

(அச்சமயம் பாசறை காவலாளி ஓடி வருகிருன.)

அலாவு: என்ன சமாசாரம்? ஏன் இப்படி ஓடி வருகிருய்?

182297

காவலன் : ஸலாம். மகராஜ்! அதோ அந்த ராணி வருகிறார்கள்.

அலாவு : வருகிறாளா? எங்கே, எங்கே! உண்மையாகவா? (ஆவலோடு எழுந்து ஓடி வருகிறான்.)

பத்மினி : மகம்மதிய அரசே! எனது கணவரைக் கடைசி முறையாக ஒரு தடவை பார்க்க அனுமதிக்கவேண்டும்.

அலாவு : பூ! இதுதானா! (காவலாளியைப் பார்த்து) யாரடா அங்கே? பீம்சிங் இருக்கும் அறையைத் திறந்துவிட்டு வா. ஓடு சீக்கிரம்.

காவலாளி : உத்தரவு மகராஜ்!

(காவலாளி கதவைத் திறக்கிறான். பத்மினி தோழிகளோடும் உள்நுழைகிறாள். அடுத்த விநாடியில் அத்தனை தோழியரும் போர்வீரராக மாறுகின்றனர். கண்இமைப்பொழுதில் மகமதிய பாசறை தாக்கப்பட்டு சின்னபின்னப்படுத்தப்படுகிறது. பீம்சிங் மீட்கப்படுகிறார். எல்லோரும் அரண்மனை அடைதல்.)

காட்சி 6

இடம் : சித்தூர் அரண்மனை. இராஜ சபை.

பாத்திரங்கள் : பீம்சிங், பத்மினி, பிரதானிகள், மந்திரிகள்.

பத்மினி : பிரதானிகளே! நம்மை அந்த துலுக்கன் ஏமாற்றப் பார்த்தான். கடைசியில் அவன் ஏமாற்றப்பட்டான். பாவம்! இந்த பத்மினியை மணந்துவிடலாம் என மனப்பால் குடித்தான். என்ன புத்தியீனம்!

பிரதானிகள் : மடையன்! இராஜ புத்ரருக்கு மானமே பெரிது என்பதை அவன் கடுகளவும் உணரவில்லை! இராஜ புத்ர மங்கையர் ஒப்பற்ற வீராங்கனைகள் என்பதையும் அவன் அறியவில்லை! மாதரின் கற்பின் வேகத்தையும், அதன் மாபெருஞ் சக்தியையும் அக்கசடன் அறியவில்லை. இன்றுதான் உணர்ந்தான்!

பீம்சிங் : மாதர்திலகமே! நீயே வீர மாது! நீயே வீர ராணி! நீயே கற்புக்கரசி! நீ ஓர் பெண்ணாயிருப்பினும் உன்னாலன்றோ இராஜபுத்ரரின் வீரமும் பெருமையும் வெளிப்பட்டன!

பிரதானிகள் : மகராஜ்! இப்படிப்பட்ட வீரமும் கற்பும் நிறைந்த மாதர் இரண்டொருவர் இருப்பதாலேயே உலகில் உண்மை அழியாதிருக்கிறது, வீரம் உயிருடன் உலவிவருகிறது. இந்திய 'வீர ராணி' பத்மினிபாய்க்கு ஜேய்! ஜேய்!! ஜேய்!!. (கோஷஞ்செய்து வாழ்த்திச் செல்கின்றனர்.)

எனது கதை

M. Visuvasam,

அந்திவேளை என்றால் எல்லோருக்கும் ஆனந்தம்தானே! தினகரன் தன் செவ்விய கதிர்களை ஒதுக்கிக்கொண்டு மேல்கடலை யடைந்தான். நாள் முழுதும் இரைதேடச் சென்ற பட்சி ஜாலங்களும் தங்கள் கூடுகளை நோக்கித் திரும்பின. அந்தகாரமோ அதிவிரைவில் தன்னாட்சியைச் செலுத்த வந்துகொண்டிருந்தது. மேயச்சென்ற மறிகளும் திருப்தியடைந்து தங்கள் மந்தையை நோக்கி நடந்தன. காலைமுதல் மாலைவரை வெயிலோ மழையோ வென்று பாராது கஷ்டப்பட்டு வந்த இடையர்களும் வரப்போகிற இரவில் சற்று களைப்பாறலாமென்று நினைத்து வீடுதிரும்பிக் கொண்டிருந்தனர்.

இத்தகைய மனோகரமான மாலை நேரத்தை யான் கழித்து நடந்துவரும் வழியில் பூமிதேவி என்னை விழித்து விழித்து பார்ப்பதுபோல் ஏதோ ஒன்று காணப்பட்டது. ஆனந்தத்துடன் கீழ் நோக்கிக் குனிந்தேன். விண்ணினின்று மண்மீதிறங்கிய மாணிக்கச்சுடரோ என்று நினைத்துக் கையில் எடுத்தேன்; அது ஒரு பழைய ரூபாய் நாணயம். அந்நாணயத்தில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் பொலிவு இழந்திருந்தன. மன்னன் முடியும் மறைந்து காணப்பட்டது. ஆகையால் அதை என்னுடைய சட்டைப்பையிலிட்டு வீடுவந்தேன். என்னைப் பசியும், களைப்பும் கடுகிவந்து வளைந்தன. அவற்றிலிருந்து விடுபட உடனே என் இராபோஜனத்தை அருந்திவிட்டு எனது சாய்வு நாற்காலியிலிருந்துகொண்டு மேஜையின்மேல் நாணயத்தைப் போட்டேன். சற்றுநேரத்திற்குள் அந்நாணயம் எழுந்து நின்று பின்வருமாறு கூறிற்று.

"எங்கு, யாரிடம் யான் பிறந்தேனென்று திட்டமாய் கூற முடியவில்லை. ஆனால் என்னைப்போன்ற பலருடன் ஒன்றாய் இணைக்கப்பட்டு இனிது வாழ்ந்துவந்தேன். அவர்களினின்று என்னை ஒரு பாவி, சண்டாளன், துரோகி உலையிலிட்டு உடம்பு நோக என்னை உருக்கி வதைத்தான். அப்பொழுது என் உருவமே மாறி இருந்தேன். பிறகு என்னை ஒரு அச்சிலிட்டு என்னுடைய வதனத்தில் வள்ளல் உருவை வடிவுடன் அமைத்தான், இம்மட்டோடு விட்டானா? இல்லை. என் பின் புறத்திலும் என் மதிப்பு இவ்வளவு என்று திட்டமாக்கி அதையும் சில எழுத்துக்களால் பொறித்தான். அச்சமயத்தில் நான் என்றுமில்லாத எழிலுடன் காணப்பட்டேன். ஆனால் நான் அவ்விடத்தில் இத்தகைய ஆனந்தத்தை அனுபவிக்கக்கூடாத துர்ப்பாக்கியனாகிய என்னை,

என்னுடைய சகோதரர்களுடன் சேர்த்து ஒரு பையிலிட்டுக் கட்டி அரசாங்க கஜனாவில் சேர்த்தார்கள். அச்சமயம் நான் பாம்பின் வாயிலகப்பட்ட தேரைபோல் தவித்தேன். தவித்தும் பயனில்லை. பிறகு அவ்விடத்தைவிட்டு ஒரு நிதிச்சாலைக்கு (Bank) என்னையும் என்னுடன் சேர்ந்தவர்களில் சிலரையும் கட்டி அனுப்பினார்கள். அங்கு நான் சின்னாட்கள் இளைப்பாறினேன். ஒருநாள் ஒரு யுவன் ஒருவன் என் எஜமானிடம் வந்து ஒரு செக்கைக் கொடுத்து என்னை மீட்டு அவன் வசப்படுத்தினான். நான் அவனிடம் அனுபவித்த கஷ்டத்தை நினைக்கையில் என்னுள்ளம் பதைக்கிறது, உடல் நடுங்குகிறது. அவன் என் அந்தஸ்தையும், கண்ணியத்தையும் மதியாதபடி என்னிலும் தாழ்ந்தவராகிய செப்பு, நிக்கல் முதலியவர்களுடன் போட்டு என்னையும் வருத்தினான்.

ஒருநாள் என் எஜமான் தன் வேலைக்கு அவசரமாய்ப் போய்விட்டார். அவசரத்தில் பையை மேஜையின்மேல் வைத்துப் போய்விட்டார். அவருடைய இரக்கமற்ற குழவியொன்று பையிலிருந்த என்னைக் கண்டுபிடித்து எடுத்தது. அப்பொழுது எனக்கிருந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஆனால் சிறிது நேரத்திற்குள் என் எண்ணத்தில் மண் விழுந்தது. உடனே குழந்தை அதனுடைய கூரிய பற்களினிடையே வைத்து என்னை சித்திரவதை செய்தது. தவிரவும் நான் அசுத்தக் காற்றை அருந்த வேண்டிய நிலைமையை அடைந்தேன். இம்மட்டோடு குழவி என்னை விட்டுவிட்டதா? இல்லை. என்னை பக்ஷிக்கவும் நினைத்து வாயினுள் போட்டு விழுங்க முயற்சித்துக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் என் உயிரைக்காக்க வந்தான் என் பிரபுவின் ஊழியன். வந்தான், உயிரைக் காப்பாற்றினான் அவ்வூழியன். அவன் வராதிருந்தால் என் உயிருக்கு உலைவைத்திருக்கும் அக்குழவி. காப்பாற்றிய ஊழியன் செய்கையைப் பார்க்கும்போது முன்னைவிட பெரிதாகிவிட்டது. என்னை அவன் மூக்குத்தூள் டப்பியினுள் போட்டுவைத்தான். அவ்விடத்தில் நான் அனுபவித்ததைக் கூற ஆயிரம் நாவு படைத்த ஆதிசேடனாலும் முடியாது. நான் இருந்த இடம் துர்க்கந்த நிலையம்: மதியை மயக்கும் மருந்துச்சாலை; கண்ணீரை வடியச்செய்யும் விஷம்; ஏழைகளின் தோழன்; பணப்பைக்குத் திருடன்; அறிவிலிகளின் ஆப்த நண்பன். சுருங்கக்கூறின் அது கொடிய நரகமேயாகும். பிறகு என்னைத் தன் மனைவி மனோவிடம் மனம் மகிழ்ந்து வெகுமதியாக வழங்கினான். அவள் என் எழிலைக் கண்டு ஏங்கினாளா! என் உருவத்தைக்கண்டு அவள் உளம்

மாறிற்று! என் மதிப்பைக்கண்டு மயங்கினாளா! என் அழகைக் கண்டு ஆனந்தித்தாளா! இல்லை, இல்லை. அக் கல்நெஞ்சுடைய காரிகை என்னை அவளுடைய சேலையின் நுனியில் முடிச்சிட்டுக் கட்டிப் போட்டுவிட்டாள். இப்பொழுது என்கதி பூனைக்குப் பயந்து புலியிடம் அடைக்கலம் போனது போலிருந்தது. எனினும் என் துரதிர்ஷ்டம் போகுமா? அவளுடைய ஆடையை விட்டு சில நாட்கள் கழித்து அவிழ்ந்து கீழே இருந்த முனிசிபல் வாய்க்காலில் விழுந்தேன். பட்டகாலிலே படும் என்பதுபோல அடுத்தடுத்து வந்தது துன்பங்கள். விரைந்து விரைந்து வந்தன வியாகுலங்கள். என் செய்வது என் தலைவிதிக்கு என்று பொறுமையுடன் அவ்விடத்தில் சுமார் ஒருமாதம் கிடந்தேன். அகதிக்கு ஆண்டவனல்லவா கதி! அக் கருணை மூர்த்தியே மேக சாலங்களைத் திரட்டி ஓர் கடுமழை பொழியச் செய்தான். வீடுகளும், தெருக்களும் வெள்ளம் பெருகி கரைபுரண்டு ஓடியது. அப்பொழுது என்னையும் அப்புனல் தட்டி யெழுப்பித்தூக்கி கரைமேல் போட்டது" என்று தன்னுடைய சஞ்சலம் நிறைந்த கதையை சடுதியில் முடித்தது. இக்கதை முடியவும் யாரோ கதவு தட்டுதலினால் துயில் நீத்தெழுந்து பார்த்தேன். ஒன்றும் காணவில்லை.

காற்றின் அழுத்தம்

கேள்வி :—நமது தேகத்தில் காற்றின் அழுத்தும் சக்தியின் அளவென்ன?

விடை :—நமது திரேகத்தில் காற்றின் அழுத்தும் சக்தி 15 டன். அதாவது 12 பெரிய மோட்டார் வண்டிகளின் நிறை.

கேள்வி :—தயவுசெய்து அதனை விளக்கமுடியுமா?

விடை :—ஒரு அங்குலம் சதுரமுள்ளதும் பூமியிலிருந்து காற்றின் உயரமளவு நீண்ட ஒரு குழாயை பூமியின்மேல் செங்குத்தாய் நிறுத்தி அதிலுள்ள காற்றின் நிறையைச் சோதித்தால் அதன் நிறை 15 பவுண்டு ஆகும். இதிலிருந்து நமது தேகத்தில் ஒரு சதுர அங்குலத்தில் காற்றின் அழுத்தம் 15 பவுண்டு என்பது தெரிகிறது. இப்படியே நமது தேகம் முழுதும் 15 டன் நிறையளவாக அழுத்தப்படுகிறது.

கேள்வி :—அப்படியானால் நமது தேகம் நசுங்கிப்போய் விடுமே? ஏன் அவ்வாறில்லை? காற்றின் கனத்தைமுதலாய் நாம் உணருவதில்லையே? என்ன காரணம்?

விடை :—வெளியிலிருக்கும் காற்று நம் தேகத்தை 15 டன் நிறையோடு அழுத்துகிறதென்று பார்த்தோம். இதே அளவில் நம் திரேகத்தின் உள்ளிருக்கும் காற்று வெளிநோக்கி அழுத்துகிறது. ஆகவே இவ்விரண்டு காற்றிற்கும் சமநிலை ஏற்படுகிறது. ஆதலால் நம் தேகம் காற்றின் அழுத்தும் சக்தியால் பாதிக்கப்படுவதில்லை.

இவ்வழுத்தும் சக்தி ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும்பட்சத்தில் திமிர்வாதம் உண்டாகிறது. அப்போது இவ்விரண்டு சக்தியையும் சமனுக்கும்பொருட்டு செயற்கைமுறை கையாளப்படுகிறது.

கேள்வி :—தயவுசெய்து இதனை ஒரு பரிசோதனையால் விளக்கமுடியுமா ?

விடை :—இதனை ஒரு சாதாரணப் பரிசோதனையால் விளக்கலாம். சாதாரண தகரப்போகணி ஒன்றை எடுத்து அதில் கொஞ்சம் தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்துக் கொதிக்கவை, கொஞ்சநேரத்தில் தண்ணீர் நீராவியாக மாறி போகணியை நிரப்புகிறது. போகணியின் உட்புறமிருந்த காற்று உஷ்ணத்தால் வெளிச்சென்றுவிடுகிறது. பிறகு ஒரு தகரமூடியால் காற்று உள்ளே செல்லாதபடி கெட்டியாக மூடி அதன்மேல் குளிர்ந்த ஜலத்தை விடு. உள்ளிருக்கும் நீராவி குளிர்ச்சியடைந்து தண்ணீராகப் போகணியின் அடியில் தங்குகிறது. நீராவியால் நிரப்பப்பட்டிருந்த இடம் இப்போது வெறும் இடமாக இருக்கிறது.

இப்போது என்ன நடக்கிறதென்று கவனி. போகணியின் மேல் மூடி, பெரும் பாரத்தால் அமுக்கப்படுவதுபோல் உட்செல்லுகிறது. இவ்விதம் அழுத்திய வஸ்து எது? அதுதான் காற்று. வெளிக்காற்றின் அழுத்துதலைச் சமனுக்க உள்ளே காற்று இல்லாததால்தான் போகணியின் மூடி உட்சென்றது.

யுக்திக்கணக்கு விடுகவி விடைகள்

(கொத்து 32, மலர் 3, பக்கம் 78.)

1. விடுகவிவிடை : கப்பல் அல்லது விமானம். இவ்விடை கொடுத்தவர்—A. Irudayam, Annamangalam.

2. யுக்திக்கணக்கு விடை : 1880 ஏக்கர். இவ்விடையளித்தவர்கள்—V. Rajagopalan ; P. S. Savarimuthu, (H. M. Labour School, Kothaiyur) ; A. Irudayam, Annamangalam ; K. Rajaraman ; George Sydney.

நான் யார் தெரியுமா ?

(M. D. P. Rayan.)

நான் ஓர் சரியான யௌவனன். எனக்கு வயது 31 முடிந்து நான்கு மாதமாகிறது. எனது பிறப்பிடம் இவ்விடந்தான். நான் பால பருவமாயிருந்தபோது அனேகர் என்னை வெறுத்தனர்; சிலர் மறுத்தனர்; பலர் வெருட்டினர். ஆயினும் எனது பெற்றோர் என்னை விட்டுவிடவில்லை. அக்காலத்தில், நான் இப்பருவத்தில் திகழ்வதுபோல பொலிவுறவில்லை. என்னுடைய பெற்றோர் என்மட்டில் வேண்டிய சிரத்தையோடு கூடிய கவனம் விசேஷித்த விதமாய்ச் செலுத்தியும், அவர்களுக்கு உதவியளிக்கப் போதிய ஆட்கள் முன்வரவில்லை. பெற்றோர் என்னை விட்டேகும் காலமும் வந்தது. பரிதாபம் எனது நிலை. என்னை உருக்குலைக்க நினைத்தவர்கள் ஆர்ப்பரித்தெழுந்தனர். ஆனால் தெய்வத் திருவருளால் என்னை ஓர் பெரும் மகான் சுவீகாரஞ் செய்துகொண்டார். சிறந்த அறிவாளி. பெரிய மகான். பெருந்தகை வள்ளல். ஏழைக்கிரங்கும் அண்ணல். பரந்த நோக்கமும் விரிந்த அறிவும் உடைய பரிசுத்தர். என் பிறப்பிடத்திற்கே திலகமாய் விளங்குபவர். நான் அடைந்திருக்கும் மகிமையென்ன! பெருமையென்ன!! மதிப்பென்ன!!! என்னை வேண்டாமென்று வெறுத்த பலரும், இவ்வண்ணலின் வன்மையால் விரும்புகின்றனர்; வரவேற்கின்றனர். அனேகர் என்னை அலங்கரிக்கப் போட்டியிட்டுக்கொள்கின்றனர். பலராலும் நான் போற்றக்கூடியவனானேன். இந்த (திருச்சி) ஜில்லா கல்வியதிகாரியின் நன்மதிப்பும், இந்நகர் ஆண்டவரின் புகழ்ச்சியின் அங்கீகாரமும் பெற்று கண்டோர் மனதை வசீகரிக்குந் தன்மையையடைந்துள்ளேன். என் கூடப் பிறந்த சகோதரர் இரண்டாயிரமாவர். இவர்கள் அத்தனை பேரையும் ஆவலாய் வரவேற்க, எம்மை உருவாக்கின அம்மகான்களுக்கு மாத்திரமல்லாமல், என்னை எனது யௌவனத்திற்கும், தற்கால நாகரீகத்துக்கும் ஏற்றவாறு அலங்காரஞ் செய்து, பிறர் மனதை கவர்ச்சிகொள்ளும் விதத்தில் என்னை பாதுகாத்துவரும் தன்னலங்கருதா காருண்யமுகிலாகிய சங். தலைமை யாசிரியர் **லூர்து சுவாமி** யவர்களுக்கு எனது மனமுவந்த நன்றியை அர்ப்பணஞ் செய்கிறேன். **நான் யார் தெரியுமா ?** கொட்டை எழுத்துக்களால் அலங்காரமாய் என் மேலாடையின் மேற்புறத்தில் பொறித்திருக்கும் **"போதன விஷய பூங்கோத்து"** என்பதே எனது சிறப்பான பெயர்

கைகண்ட போதனாமுறை

(S. E. Arul Raj)

ராமு ஒரு பொல்லாத பயல். படும்சுட்டி. குரங்குச் சேஷ்டை அதிகம் செய்வான், ஒரு நிமிஷம் சும்மாயிருக்கமாட்டான். இவனது உபாத்தியாயர் தான் போதனாமுறைப் பாடசாலையில் கற்ற முறைகளையெல்லாம் அனுசரித்துப் பார்த்தார். பலவித உபாயங்களையும் கையாடினார், ஆனால் இவருடைய முறையெல்லாம் அவனிடம் செல்லவில்லை. அவன் தினசரி அதிகமதிகமாகவே சுட்டித்தனம் செய்துவந்தான். ஆகவே, உபாத்தியாயர் 'பிரம்படி' முறையைப் பிரயோகம் செய்துவிட்டார். இம்முறையைக் கையாடத் தூண்டுகோலாக அவ்வூரில் உள்ள சில படியாத கிராமவாசிகளும் உண்டு. "நல்லா அடிச்சு படிச்சுக் கொடுங்கோ! அடியாத பிள்ளை படியாது" என்று ஆசிரியரிடம் கூறுவார்கள்.

அன்று மற்றொரு பையனுடைய புத்தகத்தைப் பறித்துக் கிழித்துப் போட்டதால் உபாத்தியாயர் கோபப்பட்டு பிரம்பால் நன்றாய் அடித்துப்போட்டார். சுட்டிப்பயல் ராமு, அழுது கொண்டு வீட்டுக்கு ஓடித் தன் தகப்பனிடம் செய்தியைக் கூறி கையோடு பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். மனிதனும் ஆசிரியரை வெகுவாகக் கோபித்துக்கொண்டார்.

ஓர்நாள் பந்தய விளையாட்டு ஒன்று அப்பள்ளியில் நடந்தது. அப்பந்தய விளையாட்டில் 'அடங்காப் பிடாரி' ராமுவும் சேர்ந்து ஓடினான். ஆசிரியர்கள் ஒருபக்கத்தில் உட்கார்ந்து இருக்க மற்றவர்கள் யாவரும் சுற்றி நின்று வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஓடியவர்களில் 'வாலில்லாக்குரங்கு' ராமு தவறி விழுந்து காயப்பட்டு எழ முடியாமல் கீழேயே கிடந்தான். அவன் விழுந்ததை யாவரும் பார்த்தும் ஒருவராவது ஓடித்தூக்கவில்லை. அவனை முன்பு நன்றாய் அடித்த உபாத்தியாயர் எழுந்து ஓடினார். பையனைத் தூக்கித் தோளில் வைத்தார். பக்கத்தில் இருந்த தன் வீட்டுக்குச் சென்றார். அவனைப் பந்தோபஸ்தாய் இருக்கவைத்து காயத்தைச் சுத்தம் செய்து தன்னிடமிருந்த மருந்தை வைத்துக் கட்டிப் படுக்கவைத்திருந்தார்.

இவ்விஷயம் கேள்விப்பட்ட ராமுவின் தகப்பன் அந்த ஆசிரியர் வீட்டுக்கு ஓடிவந்தான். தன் மகனைப் பார்த்தான். ஆசிரியரின் அன்புக்கு மெச்சி அவரிடம் முன்னொருநாள் அறியா

மல் திட்டிவிட்டதாகக்கூறி மன்னிப்புக்கேட்டான். அங்கேயே இருந்து சௌக்கியமாக்கும்படி உதவி செய்தான். 'நீங்கள் என்ன செய்தாலும் சரி! பிள்ளை உங்கள் பொறுப்பே' எனக் கூறி 'தினமும் ஒழுங்காகப் பள்ளிக்கு அனுப்புவதாகவும்' கூறி வீடு சென்றான். ஆசிரியர்மட்டில் வெகு கோபமாய் இருந்த அந்தக் கிராமத்தான் இப்போது வெகு பிரியமுள்ளவனாக நடந்து வந்தான். பையனுக்கும் சௌக்கியமானது. சுட்டித்தனம் செய்வதே கிடையாது. உபாத்தியாயரிடம் அன்றுதொட்டு பிரியத்தோடும் கீழ்ப்படிந்து நடந்து வந்தான்.

முன் வெகுவாகக் கோபித்த அக்கிராமத்தான் இப்பொழுது தன்மட்டில் அன்பாய் இருப்பதையும், பையன் சுட்டித்தனம் செய்யாது கீழ்ப்படிந்து தனக்குப் பிரியமாய் நடப்பதையும் கண்டு ஆசிரியரும் ஆச்சரியப்பட்டார். இதற்குக் காரணம் என்ன? அப்படி என்ன நாம் விசேஷமான முறையைக் கையாடினோம்? என்று ஆலோசித்தார்.

சிறிது நேரம் யோசித்தார். அம்முறையைத் தெரிந்து கொண்டார். பையன்மட்டில் தான் காட்டிய அன்பினாலல்லவா தகப்பனும் மகனும் நம் கைவசமானார்கள் என அறிந்தார்.

'நாம் படித்த பலவித முறைகளில் இம்முறை சிறந்த முறை தான்' என உணர்ந்தார். அன்றுதொட்டு தன் அனுபோகத்தால் தெரிந்த சிறந்த முறையையும் பின்பற்றினார். அப்படிப்பட்ட நவீன முறை எந்த முறை?

அதுவே "**அன்பின் முறை.**"

பெற்றோர் சங்கத் திறப்பு விழா

தி. தா. ஆலத்தூர் லேபர் பாடசாலை

28–9–41-ல் மாலை எம்மூர் பாடசாலையில் பெற்றோர் சங்கத் திறப்புவிழா நடந்தேறியது.

அவ்வமயம் இக்கிராம மிராஸ்தாரரும் நாட்டாண்மைக்காரருமாகிய ஸ்ரீமான் மு. மொட்டைய முத்திரியர் அவர்கள் தலைமை வகித்தார். மாணவ மாணவிகள் கடவுள் வாழ்த்தும் வேறு பல இனிய கீதங்களும் பாடி அவண்குழுமியிருந்த பெற்றோர்களை மனமகிழச் செய்தனர். அவ்வூர் S. சாமிநாதன் அவர்கள் பாடசாலையின் அவசியம் என்பதுபற்றி பேசினார். கீழகல்கண்டார்

கோட்டை ஸ்ரீமான் M. திருமலை அவர்கள் பெற்றோர்கள் தங்கள் குழவிகளை வளர்க்கும் விதத்தைப்பற்றி ஒரு விரிவுரை நடாத்தினர். (National High School) ஸ்ரீமான் M. இலக்ஷ்மணன் அவர்கள் கல்வியும் அதன் அவசியமும்பற்றி இனியதொரு உபந்நியாசம் செய்தார். பொன்மலை ஸ்ரீமான் R. சௌரிராஜன் அவர்கள் பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளைக் கல்வி பயின்று முன்னேறும்படி செய்ய, ஊக்கத்தையும் உற்சாகத்தையுமூட்டக் கூடிய நீண்டதொரு சொற்பொழிவாற்றினர். (Holy Cross College) ஸ்ரீமதி ஞானம்பாள் அவர்கள் பாலர்களைப்போல் பெண்களும் கல்வி பயில்வது மிக அவசியமென அறிவுரை நிகழ்த்தினர். அக்கிராசனர் இறுதியில் இனிய சொற்பொழிவாற்றினர். முடிவில் பெற்றோர்களுக்கு சந்தன தாம்பூலமும் சிறுவர்களுக்குச் சிற்றுண்டியும் அளித்து வந்தன உபசார ராஜவாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

S. மரியப்பிரகாசம், காரியதரிசி.

லால்குடி தாலுகா கரியமாணிக்கம் லேபர் பாடசாலை

30-8-41 உ எம்மூர் பாடசாலைக்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள சிங்காரக் கொட்டகையில் பெற்றோர்சங்கத் திறப்புவிழா நடைபெற்றது.

அவ்வமயம் ஷெ கிராமம் கணக்கப்பிள்ளை ஸ்ரீமான் ராமகிருஷ்ணம் பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் கூட்டம் துவங்கியது. ஷெயூர் எய்டட் எலிமெண்டரி பாடசாலை ஆசிரியர்கள் ஸ்ரீமான் சுப்புரெத்தினம் ஐயர் அவர்களும், ஸ்ரீமான் J. C. டேவிட் அவர்களும் தற்சமயம் பாடசாலை தேர்ச்சியைப் பற்றியும் பெற்றோர் கடமையைப் பற்றியும் மிகவும் விரிவான சொற்பொழிவாற்றினர்கள்.

இதற்கு அடுத்தபடியாக பாடசாலை பிள்ளைகளால் (குயுக்தி வீரன்) என்னும் பாடத்தை நாடக சம்பந்தமாக நடித்துக் காண்பித்தார்கள். இது முடிந்ததும் தலைவரவர்கள் பிள்ளைகளின் நடிப்பின் திறமையைப்பற்றிப் பாராட்டிப் பேசினர். தலைவரவர்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு கற்கண்டு சந்தனதாம்பூலத்துடன் இரவு $10\frac{1}{2}$ மணிக்கு மங்களம் பாடப்பட்டு சங்கம் இனிது கலைந்தது.

S. Joseph Raj Simson, காரியதரிசி.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

(5-9-41 முதல் 10-9-41) எம் பாடசாலைக் கால் வருஷப் பரீட்சை இத்தேதிகளில் நடைபெற்றது.

(16-9-41 முதல் 18-9-41) எம் பாடசாலை உல்லாசப் பிரயாணங்கள் :—

ஷை தேதிகளில் எம் மாணவர்களில் ஒரு பகுதியினர், கோயமுத்தூருக்கும், ஒரு பகுதியினர் (எம் பாடசாலை சாரணர்கள்-Scouts) திருச்சிக்குச் சமீபத்திலுள்ள அய்யம்பாளையத்திற்கும், எஞ்சியுள்ள பகுதியினர் உள்ளூரைச் சேர்ந்த வியக்கொண்டான் மலை, காவிரியின் கரையில் ஸ்தாபித்துள்ள ஜல சப்ளை இயந்திரசாலை (Water Supply), சுமார் 10 மைல் தூரத்திலுள்ள காவிரியின் அணைக்கட்டு (Grant Anicut) ஆகிய விடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் சென்றனர்.

சாரணரின் அய்யம்பாளைய உல்லாசப் பிரயாணம்

G. Kulandaiswamy, *S* 2

டிங், டிங், டிங், டிங். காலை மணி நான்கு கணீர் கணீரென ஒலித்தன. படுக்கையை விட்டு நாங்கள் பரபரப்புடன் எழுந்தோம். சாரணர்களுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக்கொண்டு, கண்டோர் கவர்ச்சியுறத்தக்க அணி அணியாய் நின்று கொண்டு, " ஆவே மாரி ஸ்றெல்லா " எனும் இனிய கீதத்தைப் பாடிக்கொண்டே திருச்சி மெயின் ரோட்டின் வழியாக நடந்து சென்றோம்.

திருச்சிமாநகர் கடந்ததுதான் தாமதம் எங்கள் அகத்தில் புதைந்து கிடந்த இனிய சங்கீதங்கள், பாரதியார் பாட்டுகள், மற்றும் Marching Songs முதலியவை வெளிக்கிளம்பின. இதற்கேற்ப நாங்கள் தாளங்கள் போட்டு படித்துக்கொண்டே நடந்து சென்றோம். சிறிது நேரத்தில் காவேரியின் தோற்றம் எங்கள் கண்களைக் கவர்ந்தது.

சுமார் 7 மணிக்கு நாங்கள் ஜீயபுரத்தில் காலை சிற்றுண்டியருந்திவிட்டுப் புறப்பட்டோம். சிறிது தூரம் சென்றதும், காவேரியின் அக்கரைக் கேக இரு பரிசுகளில் சென்றோம். அங்கு நாங்கள் இறங்கும் தருணம் புகைப்படமும் எடுக்கப்பட்டது. பின் விரைவாக, எங்களுக்குக் குறித்த இடத்திற்கு விரைந்து சென்றோம். ஆனால் கதிரவன் எங்களைச் சிறிது ஆயா

சப்படுத்தி விளையாட்டுப் பார்க்க வேண்டுமென்று நினைத்து, தனது வெம்மையை அதிகப்படுத்திக்கொண்டே சென்றான். ஆனால் அன்பர்களை ஆதரிக்கும் அவ்வகன்ற காவேரி, தன் தெண்ணமுதை எமக்கு ஊட்டி, சூரியனின் வெம்மையைத் தணித்தது. நாங்களும் எங்கள் பகற்போஜன நேரத்திற்கு அய்யம்பாளையம் வந்து சேர்ந்தோம்.

பின் ஆங்கோர் அழகிய தோப்பினைத் தெரிந்துகொண்டு, தோப்பின் மத்திய இடத்தில் சாரணக் கொடியை நாட்டி Salute செய்தபின் எம் அலுவல்களைக் கவனிக்கச் சென்றோம். நாங்களாகவே, அங்கு தங்கிய மூன்றுநாளும் சமைத்துச் சாப்பிட்டோம் என்னும் விஷயம் இங்கு குறிக்கப்படவேண்டியது அவசியமேயாகும். இராப்போஜனம் முடிந்தபின் Camp fire வைத்து அதில் எங்கள் முழுத் திறமையையும் காட்டிக்கொண்டோம்.

எங்கள் இரண்டாவது நாள் கால அட்டவணையை இங்கு எழுதுவது, எங்களைப்போல் வெளிவாசம் செய்ய இருக்கும் வேறு சாரணர்களுக்கு அதிகப் பிரயோஜனமாக இருக்குமாதலால் அதை ஈண்டு வரைகின்றேன். காலை சுமார் 6 மணிக்கு எழுந்து, காலை ஜெபம் முடிந்தபின் சிறிது சாரணருக்கு ஏற்பட்ட டிரில் செய்தோம். பின் காவேரி நதியில் நீந்தி விளையாடி உல்லாசமாக ஸ்நானம் செய்தபின் காலைப்போஜனம் அருந்தினோம். சுமார் 8 மணிக்கு சிறிது நேரம் விளையாடிவிட்டு, "பாதை கண்டறிதல்" எனும் பயிற்சியைப் பழகியபிறகு ஓரிடத்தில் கூடி, எங்கள் சாரணத்தலைவர் கூறும் சில சாரண ஒழுங்குகளைக் கவனித்தோம். பகற் போஜனம் அருந்தியபின் எங்கள் கூடாரத்தில் சிறிது நித்திரை செய்தோம். எழுந்தவுடன் சாரணத்தலைவர் கூறும் சாரண ஒழுங்குகளைக் கேட்டு எங்கள் குறிப்புப்புத்தகத்தில் குறித்துக்கொண்டு மாலை சுமார் 4–30 க்கு சிற்றுண்டியருந்தியபின் விளையாடினோம். பின் இரவு 7–30 க்கு சாப்பிட்டவுடன் Camp fire இருக்கும். இது முடிந்தவுடன் வெளியில் நித்திரை செய்தோம்.

நாங்கள் மொத்தம் 41 சாரணர்கள் அய்யம்பாளையம் புறப்பட்டோம். எங்களை முறையே அசோகர், அக்பர், சிவாஜி, பாரதி, தாகூர் என்ற ஐந்து பிரிவுகளாக (Patrols) பிரித்துக்கொண்டோம். எங்களைக் கூட்டிச்செல்ல மூன்று சாரணத்தலைவர்கள் எங்களுடன் வந்தனர். இவர்கள் முறையே ஸ்ரீரங்கம் சாரணத்தலைவராயிருந்த ஸ்ரீ கிருஷ்ணராவ் அவர்களும், எங்கள் சாரணத்தலைவரான ஸ்ரீ சம்மனசு உபாத்தியாயர் அவர்களும்,

உபதலைவரான பிச்சைப்பிள்ளையும் ஆவர். நாங்கள் சென்றிருந்த அவ்வூரில் எங்களாலியன்ற கிராமத் தொண்டுகள் புரிய பிரயாசப்பட்டோம். ஆனால் மழை வந்ததாலும், வேறுசில அசௌகரியங்கள் நேர்ந்ததாலும் எங்களால் முழுதும் வெற்றிபெறச் செய்யமுடியவில்லை. எனினும் நாங்கள் செய்த இரண்டொரு விஷயங்களை ஈண்டு குறிக்க வேண்டியது அவசரமாகும். ஓர் மாலையில் எங்கள் தோப்பிலிருந்து, அணியாகச் சென்றுகொண்டு "நமது ஜென்மபூமி நமது ஜென்மபூமி" எனும் பாட்டைப் பாடிக்கொண்டே ஊரில் ஒரு தெருவுக்குச் சென்றோம். அங்கு ஜனங்கள் கூடியவுடன் ஒருவர் சங்கீதம் பாடி, சிறுவர்களுக்குப் போதித்தும், வேறொருவர் இனிய கதையொன்று சொல்லியும், ஜனங்களை அதிகமாகக் கூடவைத்து, சுத்தத்தைப்பற்றி ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தினோம். இச்சொற்பொழிவு எங்கள் சாரணத்தலைவரால் நிகழ்த்தப்பட்டது. நாங்கள் போதனைமுறை பயிலும் ஆசிரியர்களாயிருப்பதால் மறுநாள் அங்கிருக்கும் போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் பாடப்போதனை நடத்திக்காண்பித்தோம். இப்படியாக எங்களால் இயன்றவாறு உழைத்து, எங்கள் உல்லாசப் பிரயாணத்தை வெற்றிபெறச் செய்தோம். இவ்வித பிரயாணத்தை எங்களுக்கு அளித்து உதவிய எங்கள் தலைமை ஆசிரியரான சங். A. Lourdusamy B.A., L.T. அவர்களுக்கு எங்கள் அணைகடந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

எங்கள் கோவை உல்லாசப் பிரயாணம்

(15–9–41 to 18–9–41)

N. R. Thiruvengadam, *S. 2.*

செப்டம்பர்-மீ 15-ம் உ இரவு 11 மணிக்குப் புறப்பட்டுச் சென்ற யாங்கள் மறுநாள் கதிரவன் உதயத்திற்குச் சற்றுநேரங் கடந்து கோவை சென்றடைந்தோம். சிற்றுண்டிக்குப் பின் மேற்றிராசன ஆலயம் சென்று ஆங்கு எங்கட்கு அளிக்கப்பட்ட விடுதியில் எங்கள் சாமான்களை வைத்து நகர்க்காட்சி காணப் புறப்பட்டோம்.

முதன்முதலாக அவ்வூர் வடபால் வனப்பொடு திகழும் 'கோஷன் பார்க்' என்ற பூந்தோட்டத்தைக் கண்டு அதன் இயற்கை வனப்பைச் சற்றே உண்டு அவ்வூருக்கே தனிப்பெருமை நல்கிவரும் 'விவசாயக் கல்லூரி' சென்றடைந்தோம். அங்கே

நவீன விவசாய முறைகள் பலவற்றையும், பரிசோதனை (Laboratory) அறையையும் பார்த்து விடுதி திரும்பினோம்.

பகலுணவிற்குப் பின் சற்றே ஓய்வெடுத்து மாலை நான்கு மணிக்கு 'பாரத் நிட்டிங் வொர்க்ஸ்' என்ற பனியன், மப்ளர் முதலிய பின்னல் வேலை செய்யும் கம்பெனியைப் பார்வையிட்டு அவ்வூரின் கிழ்ப்பாரிசத்தேயுள்ள 'பீபிள்ஸ் பார்க்' சென்றோம். அதன் மத்தியில் 'Gandhi Irwin Stadium' என்ற மேடையும் இரேடியோவும் (Radio) அமைக்கப்பட்டுள.

பின்னர் மறுநாட் காலை சிற்றுண்டிக்குப்பின் விவசாயப் பண்ணையைப் ('The central Agricultural farm') பார்வையிட்டோம். நவீன விவசாயக் கருவிகளையும் பால் பண்ணை, கோழிப்பண்ணை, தேனீ வளர்த்தல் முதலியவற்றையும் பார்த்துக்கொண்டு, வரும் வழியில் இருந்த விவசாயக் கண்காட்சி சாலையையும் பார்த்து முடித்து விடுதி சென்றிட்டோம்.

பகலுணவிற்குப்பின் கோவைக்கு கிழக்கே நான்கு கல் தூரத்திலுள்ள 'பீளமேடு' சென்று ஆங்குற்ற P. S. G. நாயுடு தர்ம ஸ்தாபன தொழிற்சாலையையும் அங்கு வேலை நடைபெறும் விதங்களையும் கண்டு அதன் அணித்தேயிருந்த 'பயனீர் பஞ்சாலை' சென்று அங்கு பஞ்சு படும் பாட்டைக்கண்டு வியந்து இரவு மணி எட்டுக்கு எங்கள் விடுதியடைந்தோம்.

மறுநாள், அதாவது 18-9-41-ம் உ அதிகாலையில் எழுந்து கோவை ஜங்ஷன் வந்தடைந்து சரியாக மணி 7-30-க்குப் புறப்பட்ட வண்டியில் ஈரோடு நோக்கிப் புறப்பட்டோம். கோவைமா நகருக்கு 'குட்பை' (Good bye) செலுத்த நாங்கள் மறந்துவிடவில்லை. பின் சரியாக 10-30 மணிக்கு வண்டி ஈரோடு வந்து நின்றது.

வண்டியினின்று இறங்கி நேராக அவ்வூரிலே உள்ள 'இலண்டன் மிஷன் கம்யூனிட்டி ட்ரெயினிங் ஸ்கூல்' சென்று அங்கு அவர்கள் கையாளும் 'செயல்முறை' (Project method) யைப் பார்க்கலுற்றோம். நாங்கள் சென்ற அவ்வமயம் பள்ளியில் பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருந்தமையின் 'செயல் முறை' யைச் செய்யுங்கால் காணும் பாக்கியம் எங்கட்கு கிட்டாது போயிற்று. இருப்பினும் அவணுற்ற ஆசிரியர்கள் எங்கள்பால் இரங்கி சில 'ப்ராஜெக்ட்' களை விரித்துரைத்தனர். எங்ஙனம் 'ப்ராஜெக்ட்' களைத் தயாரிக்கலாம் என்பதையும் நன்கு எமக்கு எடுத்துக்காட்டினர். பின்னர் எங்கள் நன்றியை அவர்கட்குச் செலுத்திவிட்டுப் பகலுணவிற்குச் சென்றோம்.

பகலுணவிற்குப்பின் அவ்வூருக்குக் கிழக்கேயுள்ள 'பீபிள்ஸ் பார்க்' சென்றடைந்தோம். ஆங்குற்ற மலர்ச்செடி, குரோட்டன்ஸ் முதலியவற்றையும் பலன்தரும் மா, கொய்யா முதலிய மரங்களையும் அவற்றின் நிழலிலே உல்லாச நடனம் புரியும் மயில்களையும் கண்டு ஆனந்தமடைந்தோம்.

பின் மாலை 4-30-க்கு ஈரோடு ஜங்ஷன் வந்தடைந்து திருச்சி நோக்கிப் புறப்பட்டோம். ஈரோட்டினின்றும் திருச்சிக்கு வண்டி 4-35 மணிக்குப் புறப்பட்டது. அந்த வண்டியில் ஏறி வழிநெடுக ஆனந்தமாகப் பாடிக்கொண்டே வந்து இரவு மணி 9-15-க்கு திருச்சி ஜங்ஷன் வந்தடைந்தோம். பின் பிரயாண அசதி நீங்க ஓய்வெடுக்க விரைந்து அவரவர் இருப்பிடம் சென்றிட்டோம்.

"யோசனைக் கணக்கு"

M. Dominic Fernando, *S. 1*

ஐந்து மந்திரிகள் குழுமியிருந்த ஓர் அரச சபைக்கு விலை மதிக்கப்படும்படி, முத்துமாலை ஒன்று கொண்டுவரப்பட்டது. அரசன் மாலையின் விலையை மதிப்பிடும்படி முதல் மந்திரியைக் கேட்டான். அதற்கு அவன் மற்ற மந்திரி நால்வரின் மாதச் சம்பளத் தொகையுடன் தன்னுடைய சம்பளத்தில் $\frac{1}{2}$ பாகம் சேர்த்தால், வரும் தொகையை மாலையின் கிரயமாகக் கூறினான். இரண்டாவது மந்திரியைக் கேட்டபொழுது, அவனும் மற்ற நான்கு மந்திரிகளின் சம்பளத் தொகையுடன் தனது சம்பளத்தில் $\frac{1}{3}$ (மூன்றில் ஒரு பாகம்) சேர்த்தால் மாலையின் விலையாகும் என்று சொன்னான். அதே விதமாக 3-வது, 4-வது, 5-வது மந்திரிகளும் மற்ற நால்வரின் சம்பளத் தொகையுடன் தங்கள், தங்களுடைய சம்பளத்தில் முறையே $\frac{1}{4}$, $\frac{1}{5}$, $\frac{1}{6}$ பாகம் சேர்த்தால் மாலையின் விலைக்குச் சரி என்று கூறினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மதித்த விலையின் வித்தியாசம் சிறிதேனும் இல்லை. அப்படியானால் அவர்கள் ஒவ்வொருவருடைய சம்பளமும் குறைந்த பட்சம் முறையே எத்தனை ரூபாய்? முத்துமாலையின் விலை என்ன? (கூடிய வரையில் விடையில் முழு நம்பர் இருப்பது நல்லது.)

தேசிய கீதம்

(A. Gnanadickam, *Music Teacher*, *Ootacamund.*)

பியாக் 29. ஏகம். ம-தீவ்ரஸ்வரம்.

(ஸ்ரீதராமுராஹரி)

பல்லவி : காரும்பாரத நாடும் கடவுளே !

சரணம் : 1. காரும்பாரத ஜீவரும் யாவர்
கருணை கனியுள பக்தியும் வாய்மை
தாரும் சுகஜீவ வாழ்வும்
தரணி புகழ் நல வளங்குலவிட.... காரும்.

2. விளைவின் மேன்மை பொலிநெடு நாடே!
மலைமேற் கவிவான் முகிற்கணகாடே!
அலைகள் சதா மோதும் கடல்சூழ்
அழகே! அழகிந்திய வீடே!... காரும்.

3. தேச மாற்றலர் அவநினை வீழ
நேச புண்ணிய அறநெறி எழ
வாச மனை கைத்தொழில் உயர்
வாழ்வும் கலை ஞானந்துலங்கிட... காரும்.

பல்லவி :	ஸா ;	நீதா	பாமா	தாபா
	கா ;	ரும்பா	ர த	நாடும்
	காரீ	கமபம	கரிகரி	ஸா ;
	க ட	வு . . .	. . . . .	ளே ;
சரணம் :	க காப	தாஸ்ஸ்	நிதஸ்ஸ்	ஸ்ாஸ்ா
	கா.ரும்	பாரத	ஜீ.வரும்	யாவர்
	தநீஸ்	ர்ிர்ிஸ்நி	தநிதப	மகா,
	கருணை	கனியுள	ப.க்தியும்	வாய்மை

தா , தா , தபத   நீ , த ப ம கா
தா , ரும் , சுக.   ஜீ , வ வா. ழ்வும்

கக கா , ரிகப   மபகரி கரிஸஸ
த ர ணி , பு.கழ்   நலவளங்குலவிட

மற்ற இரண்டு சரணங்களையும் இவ்விதமே பாடவேண்டும்.

182297

தமிழ்நாடு ஆவணக் காப்பக அலகம்

OUR EMPLOYMENT BUREAU

for

Managers of Schools in need of Trained Teachers

and

Trained Teachers in need of Employment

So many letters are pouring in to us for Teachers, that we are not able to answer individually every one of them.

The Managers may publish their needs in short advertisements in the Magazine for a very small nominal fee. They will then have a large number of applicants to select from.

Letters requiring answers from us must contain sufficient postage for our reply.

The Headmaster,
R. C. Secondary Training School,
Trichinopoly.

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற
சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு... 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School, St. Thomas Church Rd.,
OOTACAMUND.

அறிவிப்பு

உங்கள் உருவம் பதிக்கப்பெற்ற ஸ்டாம்புகள் வேணுமா? அல்லது ஆண்டவர், அர்ச்சியசிஷ்டவர்கள், பாப்பரசர், மேற்றிராணியார் ஸ்டாம்புகள் வேணுமா? 100 ஸ்டாம்புகள் ரூ. 4. விபரங்களுக்கு $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்புடன் மெஸ்மரிக் ஹோம், தூத்துக்குடி என்று எழுதவும்.

Reg. No. M. 1354.

போதன விஷய பூங்கொத்து
காரியாலயம்

பழைய சஞ்சிகைகள்

பூங்கொத்து வருஷ இதழ்களை ஒன்றாகச்சேர்த்து உபாத்திமார்களுக்கும், பாடசாலைகளுக்கும் எப்பொழுதும் உதவும்வண்ணம் புத்தகமாக பையிண்டிங் செய்து அநேகர் வைத்துக்கொள்ளுகிறார்கள். அன்னவர்கள் பழைய தனி சஞ்சிகைகள் தேவையானபோது, பிரதி ஒன்றுக்கு ஒன்றரை அணா வீதம் அனுப்ப வேண்டும். எங்களிடம் எல்லாப் பிரதிகளும் அகப்படா. வேண்டிய பத்திரிகைகளின் எண்ணைக்குறித்து அனுப்பினால் தேடிப்பார்த்துக் கிடைத்தால் அனுப்புவோம்.

சந்தா நேயர்கள்

பூங்கொத்து காரியாலயத்திற்கு மணியார்டர் செய்யும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் முழு விலாசத்தையும், சந்தா எண்ணையும் தெளிவாகக் கூபனில் எழுதினால் நலமாக இருக்கும். அவ்வாறு எழுதாமையால் பலவித அசௌகரியங்கள் நேர்கின்றன.

விலாச மாறுதல்கள்

சந்தா நேயரில் சிலர் தங்கள் விலாச மாறுதலை முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிறார்கள். விலாச மாறுதலை 10-ம் தேதிக்குள் தெரிவிப்பது நலம்.

பத்திராதிபர்.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.